**DEPOSITION OF WITNESS**

**IN THE COURT OF JUDICIAL MAGISTRATE, MUDUKULATHUR**

STC.No.330/2025
Prosecution witness.01

| | |
|---|---|
| பெயர் : கோவிந்தம்மாள் | தொழில் : |
| தந்தை/கணவர் பெயர் : தங்கவேலு | கிராமம் : |
| வயது : | தாலுகா : |

Solemnly affirmed in accordance with the provisions of the Oaths act, 1969 (Central Act 44 of 1969)

12.03.2026

(1 முதல் 3 ஆஜர் எதிரிகள்).

சாட்சி ஆஜர். சாட்சி அசல் ஆதார் அடையாள அட்டையை சரிபார்த்தும் இவர் தான் சாட்சி சொல்லும் நபர் என்று நீதிமன்றம் போலிசார் சாட்சியை அடையாளம் செய்து உறுதி செய்த பின்பு சாட்சியம் அளிக்கிறார். (ஆதார் அடையாள அட்டை நகல் பெறப்பட்டது).

**முதல் விசாரணை**

1) நான் புளியங்குடி கிராமத்தில் குடியிருந்து விவசாய வேலை செய்து வருகிறேன். ஆஜர் எதிரிகளை தெரியும். அவர்கள் உள்ளூர்காரர்கள் ஆவார்கள். எங்கள் ஊரில் எனது கொழுந்தனார் காந்தி வாங்கிய நிலங்கள் உள்ளன. நான் எங்கள் ஊரிலிருந்து அந்த நிலத்தின் வழியாகத்தான் வெளியே செல்லவேண்டும். எனது கொழுந்தனாரிடமிருந்து மேற்படி நிலத்தை ஆஜர் எதிரிகள் கிரையம் பெற்றுவிட்டார்கள். நான் வழக்கம்போல் அந்த பாதை வழியாக வெளியே சென்று வந்து கொண்டிருந்தேன். ஆனால் எதிரிகள் கடந்த ஒரு வருடத்திற்கு முன்பு ஒரு நாள் அந்த பாதையை செம்மண் போட்டு அடைத்துவிட்டார்கள். அதனால் என்னால் வெளியே செல்ல முடியவில்லை.

2) நான் அந்த சமயத்தில் மேற்படி நிலத்தின் வழியாக செல்ல முயன்றபோது எதிரிகள் மூவரும் அங்குநின்று கொண்டு எதிரிகள் என்னை செல்லக்கூடாது என்று கூறியதால் நான் அங்கிருந்து முதுகுளத்தூர் காவல்நிலையம் சென்று கூறினேன். போலிசார் வந்து அந்த இடத்தை பார்வையிட்டு இருதரப்பினரையும் விசாரித்து

பிரச்சனை செய்யக்கூடாது என்று கூறி சென்றுவிட்டார். அதனால் நானும் தைரியமாக அன்றைய தினம் சாயங்கால வேளையில் சொந்த வேலையாக அந்த வழியாக சென்றபோது எதிரிகள் மூவரும் அங்கு நின்றுகொண்டு அவர்களில் ஆஜர் எதிரி முருகன் என்னை பார்த்து நொம்மா நோத்தா என்று அசிங்கமாக பேசி சங்கை அறுத்திருவேன்டி என்று கூறிக்கொண்டே அவரது காலால் எனது வயிற்றில் மிதித்து கீழே தள்ளினார்.

3) நான் கீழே விழுந்ததும் எதிரி பஞ்சவர்ணம் அங்கு கிடந்த கட்டையை எடுத்து வந்து அடிடாஅடிடா என்று சொல்லி என்னை வலது தோள்பட்டையில் அடித்துவிட்டார். எதிரி பெருமாள் ஓடிவந்து நானும் உன்னை விடமாட்டேன்டி என்று சொல்லி எனது இடது தொடையில் அவரது காலால் மிதித்தார். பிறகு எதிரிகள் அங்கிருந்து சென்றுவிட்டார்கள். நான் அங்கேயே கீழே கிடந்தேன். சிறு நேரம் கழித்து எனது மகள் செல்வி ஆடுமேய்த்துக்கொண்டு அங்கு வரவும். நான் கீழே கிடந்ததை பார்த்துவிட்டு ஓடிவந்து என்னை தூக்கினார். அப்போது பக்கத்து வீட்டை சேர்ந்த முருகேஷ்வரியும் அங்கு வந்து எனக்கு உதவி செய்தார். பிறகு எனது மகள் தஞ்சாக்கூரில் உள்ள எனது பேரன் பெருமாளுக்கு தகவல் அளித்து அவரும் வந்து ஒரு ஆட்டோவை பிடித்து அந்த ஆட்டோவில் ஏற்றி என்னை முதுகுளத்தூர் அரசு மருத்துவமனைக்கு அழைத்து சென்றார். அங்கு ஒரு வாரகாலம் உள்நோயாளியாக சிகிச்சை பெற்றேன். நான் சிகிச்சையில் இருந்தபோது போலிசார் வந்து என்னிடம் விசாரித்தார்கள். நான் நடந்ததை கூறினேன். அதை அவர்கள் எழுதிக்கொண்டு என்னிடம் கையொப்பம் கேட்டார்கள். மேலும், அவர்கள் எழுதியதை என்னிடம் படித்து காண்பித்தார்கள். நான் கூறியபடி எழுதப்பட்டிருந்தது. எனக்கு கையொப்பம் போட தெரியாது என்பதால் நான் எனது பெருவிரல் ரேகையை வைத்தேன். என்னிடம் காட்டப்படும் புகார் மனுவிலுள்ள பெருவிரல் ரேகை என்னுடையது தான். புகார் மனு நான் அளித்தது தான். **புகார் மனு அ.சா.ஆ.1 ஆக குறியீடு செய்யப்படுகிறது.** போலிசார் என்னை விசாரித்தனர்.

<u>எதிரிகள் தரப்பில் குறுக்கு விசாரணை</u>

1) நான் வயல்காட்டில் கூலிவேலை செய்து வருகிறேன். வழக்கு சம்மந்தமாக புகார் மனுவை யார் கொடுத்தார்கள் என்றால் எனது பேரன் தான் கொடுத்தார். போலிசார் என்னை சம்பவத்திற்கு மறுநாள் சம்பவ இடத்திற்கு வந்து விசாரித்தார்கள்.

நான் முதல்விசாரணை சாட்சியத்தில் கூறிய சங்கதிகளைத்தான் போலிசார் விசாரித்தபோது கூறினேனா என்றால் ஆமாம். சம்பவமானது இரவு 08.00 மணியளவில் நடைபெற்றது. சம்பவம் நடந்ததாக சொல்லப்படுகிற சமயத்தில் இருட்டாக இருந்தது என்றால் சரிதான். இரவு 10.00 மணியளவில் முதுகுளத்தூர் அரசு மருத்துவமனைக்கு சென்றேன். எதிரி பஞ்சவர்ணம் என்னை கட்டையால் தாக்கினார். நான் இந்த விபரத்தை மருத்துவர் விசாரித்தபோது கூறினேன்.

2) எதிரி பஞ்சவர்ணம் என்னை கட்டையால் அடித்ததாக சொல்லப்படுகிற நிலையில் அந்த கட்டையை போலிசாரிடம் ஒப்படைத்தேனா என்றால் நானே மயங்கி விழுந்துவிட்டேன் அந்த கட்டையை எல்லாம் நான் சம்பவத்திற்கு பிறகு பார்க்கவில்லை. நான் எத்தனை நாட்கள் மயக்கத்தில் இருந்தேன் என்றால் 4 நாட்கள் வரை மயக்கத்தில் இருந்தேன். சம்பவ சமயத்தில் சம்பவத்தை விலக்குவதற்கு யாரும் வரவில்லை நான் கீழே விழுந்த பிறகு தான் எனது மகளும், மருமகள் முருகேஷ்வரியும் வந்து என்னை தூக்கினார்கள். சம்பவ இடத்தில் எதிரிகளின் ஆட்கள் மட்டுமே மொத்தம் 10 பேர் வரையில் இருந்தார்கள். அவர்கள் யாரும் வந்து விலக்கவில்லை. எனக்கும், ஆஜர் எதிரிகளுக்கும் இடையே இடப்பிரச்சனை இருந்து வந்தது என்றால் எனக்கு பாதை விடவில்லை என்பதால் தான் பிரச்சனை வந்தது.

3) எனது பேரன் பெருமாள் தான் என்னை மருத்துவமனையில் சேர்த்தார் என்றால் சரிதான். நான் கூறியபடி சம்பவம் நடைபெறவில்லை என்றாலும், நான் வயல்காட்டில் வேலை செய்தபோது கீழே விழுந்து காயத்தை ஏற்படுத்திக்கொண்டு அந்த காயத்தை வைத்து ஏற்கெனவே எதிரிகள் மீதான இடப்பிரச்சனைக்கு அவர்களை பழிவாங்கும் விதமாக பொய்யாக புகார் அளித்து பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றாலும், எதிரிகளுக்கும் வழக்கிற்கும் சம்மந்தம் இல்லை என்றாலும் சரியல்ல.

**DEPOSITION OF WITNESS**

**IN THE COURT OF JUDICIAL MAGISTRATE, MUDUKULATHUR**

STC.No.330/2025
Prosecution witness.02

| | |
|---|---|
| பெயர் : செல்வி | தொழில் : |
| தந்தை/கணவர் பெயர் : தங்கவேலு | கிராமம் : |
| வயது : | தாலுகா : |

Solemnly affirmed in accordance with the provisions of the Oaths act, 1969 (Central Act 44 of 1969)

12.03.2026

(எதிரிகள் 1 முதல் 3 ஆஜர்).

சாட்சி ஆஜர். சாட்சி அசல் ஆதார் அடையாள அட்டையை சரிபார்த்தும் இவர் தான் சாட்சி சொல்லும் நபர் என்று நீதிமன்றம் போலிசார் சாட்சியை அடையாளம் செய்து உறுதி செய்த பின்பு சாட்சியம் அளிக்கிறார். (ஆதார் அடையாள அட்டை நகல் பெறப்பட்டது).

**முதல் விசாரணை**

நான் புளியங்குடி கிராமத்தில் குடியிருந்து விவசாய வேலை செய்து வருகிறேன். அசா.1 எனது தாயார் ஆவார். ஆஜர் எதிரிகளை தெரியும். அவர்கள் உள்ளூர்காரர்கள் ஆவார்கள். போனவருடம் ஒரு நாள் காலை 08.00 மணியளவில் நான் எனது வீட்டில் இருந்தபோது எனது அண்ணி முனீஸ்வரி எனது வீட்டிற்கு வந்து ஆஜர் எதிரிகள் மூவரும் சேர்ந்து அசா.1 னான எனது தாயாரை தாக்கிவிட்டதாகவும், அவரது வீட்டின் வாசலில் கிடப்பதாகவும் கூறினார். நான் எனது தாயாரின் வீட்டிற்கு ஓடிச்சென்று பார்த்தபோது எனது அம்மா கீழே கிடந்தார். அவரை தூக்கி என்ன நடந்தது என்று கேட்டபோது எதிரிகள் பாதை வழியாக செல்லவிடாமல் பஞ்சவர்ணம் என்பவர் கட்டையை வைத்து எனது தாயாரின் நடுமுதுகில் அடித்துவிட்டதாக தெரிவித்தார்.

நான் உடனடியாக எனது அக்காவின் மகன் பெருமாளுக்கு போன் செய்தவுடன் பெருமாள் அங்கு வந்து ஒரு ஆட்டோ பிடித்து எனது தாயாரை மருத்துவமனைக்கு அழைத்து சென்றார். இது நிமித்தம் எனது தாயார் போலிசாரிடம்

தகவல் அளித்ததன்பேரில் போலிசார் வழக்கு பதிவு செய்து என்னை விசாரித்தனர்.

(அரசு தரப்பில் சாட்சியை பகுதி பிறழ்சாட்சியாக பாவித்து குறுக்கு விசாரணை செய்ய அனுமதி வேண்டியதன் பெயரில் அனுமதி வழங்கப்பட்டு அரசு தரப்பில் குறுக்குவிசாரணை செய்யப்படுகிறார்).

**அரசு தரப்பில் குறுக்கு விசாரணை**

நான் மேலே கூறிய சம்பவத்தின்போது 1ம் மற்றும் 2ம் எதிரிகள் சேர்ந்து எனது தாயாரை ஆபாசமாக பேசி அவர்களில் 1ம் எதிரி வீட்டிலிருந்து அருவாளை எடுத்துக்கொண்டு வந்து காலால் எனது தாயாரை வயிற்றில் எட்டி உதைத்து கொன்றுவிடுவேன் என மிரட்டியதாகவும், 2ம் எதிரி கட்டையால் எனது தாயாரின் கை மற்றும் முதுகில் அடித்து காயம் ஏற்படுத்தியதாகவும், 3ம் எதிரி காலால் எனது தாயாரின் இடது தொடையில் மிதித்ததாகவும் அதை பார்த்த நானும், முருகேஷ்வரியும் விலக்கிவிடச்சென்றபோது எதிரிகள் மூவரும் சேர்ந்து எனது தாயாரை கொலைமிரட்டல் விடுத்ததை நேரில் பார்த்ததாக போலிசார் விசாரித்தபோது கூறிவிட்டு தற்போது எதிரிகளின் மிரட்டலுக்கு பயந்து பகுதி பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

**எதிரிகள் தரப்பில் குறுக்கு விசாரணை**

சம்பவத்தை நான் நேரடியாக பார்க்கவில்லை என்றால் சரிதான்.